1979 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல அந்த அனல் மின் நிலையம் 106 இலட்சம் ரூபாயில் அன்றைய தினம் நிறுவப்பட்டாலும், அதை ஏலமிட்ட தேதியில் கிட்டத்தட்ட 420 இலட்சம் பெறுமானமுள்ளது. ஆனால் ஏலத்திலே 59 இலட்சம் ரூபாய் கிடைத்திருக்கிறது. பொதுஉக, மின்வாரியம் புதிதாக மின் திட்டங்களை ஆரம்பிக்கின்றபோது இந்த அரசாங்கத்தின அனுமதியைக் கோருகிறது. ஆனால், மின்திட்டங்களை அவர்கள ஏலம் போடுகிறபோது அல்லது மூடுகிறபோது அல்லது விற்கிற போது அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டுமென்ற நியதி இல்லை. அதற்கான சட்டமும் இல்லை. ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் தீவிர பரிசீலனை செய்து, மின்வாரியம் இத்தகைய காரியங்களை மேற்கொள்ளுகிறபோது அரசையும் கலந்துதான் செய்ய வேண்டுமென்ற ஒரு நிலையை உருவாக்குவதற்கு நிச்சயமாக பரிசிலனை செய்யும் என்பதையும், சுய ஆட்சி இந்த வகையில் பொருத்தம் இல்லாதது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நெய்வேலி இரண்டாவது மின் நிலையம்.

*வினா எண் 62—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நெய்வேலியில் இரண்டாவது மின் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இது மத்திய அரசு சம்பந்தப்பட்டது. 1978 பிப்ரவரி மாதத்தில் இரண்டாவது பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் வெட்டுவதற்கும், 630 மெகாவாட் திறனுள்ள இரண்டாவது அனல் மின் நிலையம் அமைப்பதற்கும் தேவையான ஒப்புதலை நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்திற்கு, மத்திய அரசு அனுப்பியுள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் தற்போது திட்டத்தினை நிறைவேற்றுவதற்கான பணிகளை மேற்கொண்டுள்ளது.

திரு. மா. மணிமாறன்: நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தை வெட்ட வேண்டுமென்பது தமிழகத்தின் நீண்ட நெடுநாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. இந்தத் திட்டத்தை இப்போதாவது விரைந்து செயலாக்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் சொன்னது போல் பிப்ரவரி 1978-ல் இந்தத் திட்டத்திற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற வேண்டுமென்று நினைக்கிற தமிழகம் இத்தகைய திட்டங்கள்

விரைவுபடுத்தப்பட வேண்டுமென்ற அடிப்படையைக் கொண்டு ஒரு குழுவை நம் அரசாங்கத்தில் அமைத்திருக்கிறார்கள். அதிலே தமிழ்நாட்டில் நிறைவேறுகிற நம்முடைய மின் திட்டங்கள், அதே போல் மத்திய சர்க்காரால் நிறைவேற்றப்படுகிற மின் உற்பத்தித் திட்டங்கள் அவைகளின் அதிகாரிகளைக் கொண்ட குழு என் தலைமையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு மூன்று மாதத்திற்கு ஒரு தடவை கூடி எந்த அளவுக்கு அந்தப் பணிகள் விரைவுப்படுத்தப்பட வேண்டுமென்று கண்காணித்து வருகிறது. கல்பாக்கத்திலிருந்தும் நெய்வேலியிலிருந்தும் அதிகாரிகள் மத்திய அரசு ஒப்புதலோடு அந்தக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.

திரு. என். கிட்டப்பா : தற்போது நெய்வேலியில் எவ்வளவு மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது? இரண்டாவது திட்டத்தின் கீழ் எத்தனை மெகாவாட் மின்சாரம் உற்பத்தித் திறன் கிடைக்க இருக்கிறது? அதற்கான செலவுத் தொகையை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்கிறதா அல்லது மாநில சர்க்காருக்கும் பங்கு உள்ளதா? இதனால் புதிதாக எவ்வளவு பேருக்கு வேலை கிடைக்க இருக்கிறது? 'சன்ஸ் ஆப் தி சாயில்' என்ற அடிப்படையில் நமது மாநிலத்தில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகமாகத் தர அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தத் திட்டம் முழுக்க முழுக்க மத்திய அரசுத திட்டம். இந்தத் திட்டத்திற்குச் சுமார் 358.45 கோடி ரூபாய் செலவாகும். சுரங்கம் வெட்டுவதற்கு 144.47 கோடி ரூபாயும், அனல் மின் நிலையம் அமைப்பதற்கு 213.98 கோடி ரூபாயும் செலவாகும்; மாநில அரசு எந்த நிதியும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்தத் திட்டத்தின் மூலம் 630 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கும். இதிலே எத்தனை பேர் பணியாற்றுவார்கள், அவர்கள் எவ்வாறு நியமிக்கப்படுவார்கள் என்பதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

திரு. ரா. உமாநாத் : ஒரு குழு அமைத்ததாகக் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாநில அரசுத் திட்டங்களையும் மத்திய அரசுத் திட்டங்களையும் பற்றிப் பரிசீலிக்க மூன்று மாதத்திற்கு ஒரு தடவை கூடுவதாகச் சொன்னார்கள். முக்கியமாக இந்த நெய்வேலித் திட்டத்திற்கு சென்ட்ரல் கவர்ன்மென்ட் சாங்ஷன் செய்திருப்பதால் அந்தக் குழு அவசரமாகக் கூடி இந்தத் திட்டத்தை விரைவு படுத்தி வேலையை ஆரம்பித்து மின்சாரத்தை உற்பத்தி செய்வது பற்றிய பணிகளை ஆரம்பிக்க பிரையாரிடி கொடுத்து செய்ய அரசாங்கம் முன்வருமா? 'சன்ஸ் ஆப் தி சாயில்' என்ற திட்டத்தை நண்பர் கிட்டப்பா அவர்கள் சொன்னார்கள். அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதா?

1979 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கேள்வி நேரத்தில் கொள்கை அறிவிப்புகள் கூடாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் நனகு அறிவார்கள். அந்தக் குழு 24-11-78 அன்று கூடியது. இந்த மின் உற்பத்தித் திட்டம் விரைவு படுத்தப்பட்டால்தான் நாம் மின்வெட்டில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என்ற நிலை நமக்கு இருக்கிறது. கேரளத்தி லிருந்து கிடைக்கும் மின்சாரம் தொடர்ந்து கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை, அவர்களுடைய தேவையும் கூடிக் கொண்டிருக் கிறது. இரண்டாவது பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தை வெட்டு வதற்காகவும் மின் நிலையம் அமைப்பதற்காகவும் உலக அளவில் ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன. மண் ஆய்வு வேலை கள் முடிவுற்று மேற்கொண்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருவதாகக் குறிப்பிட்டார்கள், டாடா கலந்தறிவாளர்கள் (கன்சல்டன்ட்ஸ்) கலந்தறிவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள தாகவும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவ தாகவும் அவர்கள் மேலும் தெரிவித்திருக்கிறார்கள்.

[முற்பகல் 9.10.]

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இன்றைக்குப் பத்திரிகையிலே பார்த்தால் 320 மெகாவாட் நெய்வேலியிலே கிடைப்பதன் காரணமாக மின்வெட்டு நிறுத்தப்பட்டுவிட்டது என்று அறிகிறோம். ஆனால் இதே நடவடிக்கையை சிறிது காலத்திற்கு முன்னாலேயே அரசு எடுத்து இருந்தால் இப்படிப் பட்ட மின்வெட்டு வந்திருக்காது என்று கருதுகிறேன். ஏன் அரசு அப்படிக் கவனம் செலுத்தவில்லை என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நெய்வேலியிலிருந்து 400 மெகாவாட் சாதாரணமாகக்கிடைத்து வருகிறது. ஆனால் திடீரென்று ஏற்பட்டுவிட்ட இயந்திரக் கோளாறினால் ஒருவார மாக அந்த அளவிற்குக் கிடைக்கவில்லை, ஆகவே ஒரு மின்வெட்டு தற்காலிகமாக அமல்படுத்தப்பட்டது. மறுபடியும் இப்போது அந்த மெஷினை ரிப்பேர் செய்து அந்த அளவிற்கு 350 மெகா வாட் உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றது. அதுபற்றி 41-வது விதியின் கீழ் ஒரு அறிக்கை இந்த மன்றத்திலே வர இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறை நியாயவிலைக் கடைகள்.

*வினா எண் 63—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கூட்டுற வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:

(அ) நியாயவிலைக் கடைகளைக் கூட்டுறவுகளிடம் ஒதுக்கு வது சாத்தியமில்லாத இடங்களில் படித்து வேலையில்லாதோர்க்கு ஒதுக்க மத்திய அரசு மாநில அரசுக்கு யோசனை கூறியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?